
**நவம்பர் – 17**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு முதலமைச்சர் 2025 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதியன்று சென்னை மாநகராட்சியின் (GCC) துப்புரவுப் பணியாளர்களுக்கான இலவச உணவுத் திட்டத்தை (முதலமைச்சரின் உணவு வழங்கும் திட்டம்) தொடங்கி வைத்தார் என்ற நிலையில் இந்த உணவுத் திட்டமானது டிசம்பர் 06 ஆம் தேதி முதல் அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.
    - இந்தத் திட்டம் இந்தியாவிலேயே முதல்முறையாக தூய்மைப் பணியாளர்களுக்கு மூன்று வேளையும் உணவு வழங்கும்.
- குஜராத்தின் முக்கிய புனித யாத்திரைத் தலமும் சக்திபீடமுமான அம்பாஜியில் இருந்து வரும் பளிங்குக் கல்லிற்கு, அதன் உயர்தர வெள்ளைக் கல்லுக்காகப் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- 10வது சர்வதேச கீதை விழாவானது குருக்ஷேத்திரத்தில் தொடங்கப்பட்டுள்ளது.
    - ஐம்பத்தொரு நாடுகள் பங்கேற்கும் இந்த 2025 ஆம் ஆண்டு விழாவின் கொண்டாட்டங்களுக்கான பங்குதாரர் மாநிலமாக மத்தியப் பிரதேசம் உள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## TIDCO விண்கலங்களின் உந்து எரிபொருள் உற்பத்திப் பூங்கா





- குலசேகரப்பட்டினத்தில் நிறுவப்பட உள்ள இஸ்ரோவின் ஏவுதளத்திற்கு அருகில் தமிழ்நாடு அரசு ஓர் உந்து எரிபொருள் உற்பத்தி மற்றும் விண்வெளி உற்பத்தி மண்டலத்தை நிறுவி வருகிறது.
- இந்தப் புதிய ஏவுதள வளாகம் ஆனது, கடல் வழியாக நேரடியாக தெற்கு நோக்கிய ஏவு பாதைகளை செயல்படுத்துகிறது.
- இது ஸ்ரீஹரிகோட்டாவில் தேவைப்படும் அதிக எரிபொருள் தேவைப்படும் ஏவு வாகனப் பாதை திசை திருப்புதல் முயற்சிக்கான தேவையையும் குறைக்கிறது.
- சிறிய செயற்கைக்கோள் ஏவு வாகனம் உள்ளிட்ட பணிகளுக்கு இந்தத் தளத்திலிருந்து ஏவுதல் செலவுகள் சுமார் 30% குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- ஆற்றல்மிக்க பொருட்களைக் கையாள்வதற்கான பாதுகாப்புத் தேவைகளைப் பூர்த்தி

செய்வதற்காக ஏவுதள மையத்திலிருந்து குறைந்தது 25 கி.மீ தொலைவில் ஒரு சிறப்பு உந்து எரிபொருள் உற்பத்திப் பூங்கா அமைக்கப்படும்.

- 100 கோடி ரூபாய் என்ற அனுமதிக்கப்பட்ட ஒதுக்கீட்டில் அமைக்கப்படும் ஒரு பொது வசதியாக்க மையம் ஆனது சோதனை, சரிபார்ப்பு மற்றும் பகிரப்பட்ட உற்பத்தி நடவடிக்கைகளை ஆதரிக்கும்.

# தேசியச் செய்திகள்

## ஏரோஹப் பல்திரையரங்கம் வழக்கு





- சென்னையில் உள்ள ஏரோஹப்பில் உள்ள இந்தியாவின் முதல் விமான நிலையப் பல் திரையரங்கத்தினை மூடுவது தொடர்பாக PVR ஐனாக்ஸ் தாக்கல் செய்த மனுக்கள் மீதான உத்தரவுகளை சென்னை உயர் நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.
- PVR ஐனாக்ஸ் ஒரு துணை உரிமதாரர் மட்டுமே என்றும், மீனம்பாக்கம் ரியால்டி பிரைவேட் லிமிடெட் உடனான முக்கிய ஒப்பந்தம் நிறுத்தப்பட்டு நடுவர் மன்றத்தில் உள்ளது என்றும் இந்திய விமான நிலைய ஆணையம் தெரிவித்துள்ளது.
- 1994 ஆம் ஆண்டு இந்திய விமான நிலைய ஆணையச் சட்டத்தின் கீழ் ஒரு சினிமா அரங்கம் அனுமதிக்கப்பட்ட செயல்பாடு அல்ல என்றும், எனவே அது விமான நிலைய வளாகத்திற்குள் செயல்பட முடியாது என்றும் ஆணையம் வாதிட்டது.
- மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை சோதனைச் சாவடிகளுக்கு வெளியே இருந்தாலும், ஏரோஹப் பகுதி சட்டப் பூர்வமாக விமான நிலைய மண்டலத்தின் ஒரு பகுதியாகும் என்று அது வாதிட்டது.

## இந்தியாவில் காசநோய் ஒழிப்பு

- 2015 ஆம் ஆண்டில் ஒரு லட்சத்திற்கு 237 ஆக இருந்த இந்தியாவின் காசநோய் பாதிப்பு 21% குறைந்து, 2024 ஆம் ஆண்டில் ஒரு லட்சத்திற்கு 187 ஆகக் குறைந்தது.
- இந்த சரிவு உலகளாவிய விகிதத்தை விட கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அதிகமாகும்.
- 26.18 லட்சம் நோயாளிகள் கண்டறியப்பட்டு, 2024 ஆம் ஆண்டில் சிகிச்சை வழங்கல் 92% ஆக உயர்ந்தது.
- இது பதிவாகாத காசநோய்ப் பாதிப்புகளில் பெரும் குறைப்புக்கும் வழிவகுத்தது.
- காசநோய் முக்த் பாரத் அபியானின் கீழ் சிகிச்சை வெற்றி விகிதம் 90 சதவீதத்தினை

எட்டியது.

- இது உலகளாவிய வெற்றி விகிதமான 88 சதவீதத்தினை விட அதிகமாகும்.
- இந்தியா மருந்து-எதிர்ப்புத் திறன் கொண்ட காசநோயை முன்கூட்டியே கண்டறிவதை வலுப்படுத்தியதன் மூலம், 92% ரிஃபாம்பிசின் சோதனை பரவலை அடைந்துள்ளது.
- இந்த சோதனைக்கான உலகளாவியச் சராசரி 83% ஆகும்.
- காசநோய் முக்த் பாரத் அபியானின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை 24.5 லட்சம் காசநோய் நோயாளிகளை அடையாளம் கண்டுள்ளது என்ற நிலையில் இதில் 8.61 லட்சம் அறிகுறியற்றப் பாதிப்புகள் அடங்கும்.
- 19 கோடி பாதிக்கப்படக்கூடிய நபர்களைப் பரிசோதித்த பிறகு இது மேற்கொள்ளப் பட்டது.




## பழங்குடியின வணிக மாநாடு 2025


- பாரம்பரிய பழங்குடியினர் பொருட்களை ஊக்குவிப்பதற்காகப் புவிசார் குறியீடுகள் (GI) விண்ணப்பக் கட்டணம் 5,000 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாகக் குறைக்கப்பட்டது.
- புது டெல்லியில் உள்ள பழங்குடியின வணிக மாநாடு ஆனது பழங்குடியின தயாரிப்புகளுக்கான ஏற்றுமதி, இணைய வணிகம் மற்றும் சர்வதேச கிடங்கு ஆதரவை அறிவித்தது.
- இந்த நிகழ்வினைப் பழங்குடியின விவகார அமைச்சகம், கலாச்சார அமைச்சகம் மற்றும் தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை (DPIIT) ஏற்பாடு செய்தன.
- கண்ணாடிப்பாயா மூங்கில் பாய், அபதானி ஜவுளி, மார்த்தாண்டம் தேன், லெப்சா

துங்புக், போடோ அரோனை, அம்பாஜி வெள்ளை பளிங்கு, மற்றும் பெடு மற்றும் பத்ரி பசு நெய் போன்ற பொருட்களுக்குப் புவிசார் குறியீட்டுச் சான்றிதழ்கள் வழங்கப் பட்டன.




# சர்வதேசச் செய்திகள்

## கேமரூன் பகுதியில் அமைதியின்மை




- 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், எட்டாவது முறையாக அதிபர் பால் பியா மீண்டும் தேர்ந்தெடுக்கப் பட்ட பிறகு கேமரூன் அமைதியின்மையை எதிர்கொண்டது.
- தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து டூவாலா, மாரூவா மற்றும் கரோவா போன்ற நகரங்களில் பெரிய ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

- பால் பியா 1982 ஆம் ஆண்டு முதல் ஆட்சியில் இருந்து வருகிறார் என்ற நிலையில் இது உலகின் மிக நீண்ட காலம் பணியாற்றிய அரசத் தலைவர்களில் ஒருவராக அவரை ஆக்கியது.

## அமெரிக்க முடக்கம் முடிவு




- அமெரிக்க வரலாற்றில் மிக நீண்ட 43 நாட்கள் அளவிலான முடக்கத்திற்குப் பிறகு அமெரிக்க அரசாங்கம் மீண்டும் திறக்கப்பட்டது.
- மலிவு விலையிலான பராமரிப்புச் சட்டத்தின் (ACA) கீழ் சுகாதாரக் காப்பீட்டு மானியங்களின் நீட்டிப்பு சேர்க்கப் பட விட்டாலன்றி ஒப்புதல் அளிக்கப்படாது என்று ஜனநாயகக் கட்சியினர் நிதி மசோதாவை அங்கீகரிக்க மறுத்ததால் இந்த முடக்கம் தொடங்கியது.
- குடியரசுக் கட்சியினர் ACA மானியங்களைச் சேர்க்க மறுத்து விட்டதால், இது காங்கிரசில் ஒரு முடக்கத்தினை ஏற்படுத்தியது.
- அங்கீகரிக்கப்பட்ட நிதி மசோதா இல்லாமல், கூட்டாட்சித் துறைகள் நிதி இல்லாமல் ஆகின என்பதோடு இது அரசாங்க முடக்கத்தைத் தூண்டியது.
- 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை கூட்டாட்சி செயல்பாடுகளை மீட்டெடுக்கும் ஒரு தற்காலிக நிதி மசோதாவில் அதிபர் டிரம்ப் கையெழுத்திட்டார்.
- ஜனநாயகக் கட்சியினருடனான சர்ச்சையின் மையமாக இருந்த மலிவுப் பராமரிப்புச் சட்டத்தின் (ACA) கீழ் சுகாதாரக் காப்பீட்டு மானியங்கள் இந்த மசோதாவில் சேர்க்கப் படவில்லை.

## பசுமை எரிபொருள் வரி – சிங்கப்பூர்

- அடுத்த ஆண்டு முதல் விமானப் பயணிகள் மீது உலகின் முதல் பசுமை எரிபொருள் வரியை சிங்கப்பூர் விதிக்க உள்ளது.
- சாதாரண (Economy) மற்றும் மேம்பட்ட (Premium) வகுப்பில் பயணிக்கும் பயணிகள் ஒரு விமானப் பயணத்திற்கு 1 டாலர் முதல் 10.40 டாலர் வரை செலுத்த வேண்டும், அதே நேரத்தில் வணிக (Business) மற்றும் முதல் வகுப்பு பயணிகள் 4 மடங்கு அதிகமாக செலுத்த வேண்டும்.

- கழிவு எண்ணெய்கள் அல்லது வேளாண் மூலப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் நிலையான விமான எரிபொருளை (SAF) வாங்குவதற்கு இந்த வரி நிதியளிக்கும்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் SAF ஏற்பிற்கான இலக்கு ஆனது மொத்த விமான எரிபொருளில் 3–5% ஆகும்.
- அக்டோபர் 01 ஆம் தேதி முதல் சிங்கப்பூரிலிருந்து புறப்படும் விமானங்களுக்கு ஏப்ரல் 01 ஆம் தேதி முதல் விற்கப்படும் சரக்கு விமானங்கள் மற்றும் பயணச் சீட்டுகளுக்கும் வரி விதிக்கப் படும்.




## பொருளாதாரச் செய்திகள்

### சில்லறைப் பணவீக்கம் - அக்டோபர் 2025

- இந்தியாவின் சில்லறைப் பணவீக்கம் ஆனது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 0.25% ஆகக் குறைந்துள்ளது என்பதோடு இது வரலாற்றில் மிகவும் குறைந்த அளவைக் குறிக்கிறது.
- இது 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்குப் பிறகு பதிவான மிகக் குறைந்த பணவீக்க விகிதமாகும் என்பதோடு மேலும் தற்போதைய CPI தொடரில் மிகக் குறைவாகும்.
- சரக்கு மற்று சேவை வரி விகிதக் குறைப்பு, சாதகமான அடிப்படை விளைவு மற்றும் உணவுப் பொருட்களில் பணவீக்கம் குறைதல் ஆகியவை இந்தச் சரிவுக்கு ஒரு முக்கிய காரணமாக அமைந்தன.
- செப்டம்பர் மாதத்தில் 1.4% குறைவினைத் தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் உணவு மற்றும் பானங்களின் பணவீக்கம் 3.7% குறைந்துள்ளது.

- 1.7% ஆகக் குறைந்த ஆடை மற்றும் காலணிகளைத் தவிர, பிற பெரும்பாலான நுகர்வோர் விலைக் குறியீட்டு வகைகளில் கடந்த ஆண்டை விட அதிகப் பணவீக்கம் பதிவாகின.
- எரிபொருள் மற்றும் மின் விளக்குகள் பணவீக்கம் 2% ஆக உயர்ந்தது என்பதோடு மேலும் வீட்டு வசதிகள் மீதான பணவீக்கம் 3% ஆக அதிகரித்தது.
- இதரப் பணவீக்கம் ஆனது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சுமார் 5.7% ஆக அதிகரித்தது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## மொழி மற்றும் அறிவாற்றல் ஆய்வகம் - IIT மெட்ராஸ்

- இந்தியாவின் மொழியியல் பன்முகத்தன்மையை ஆய்வு செய்வதற்காக என மதராஸ் இந்தியத் தொழில் நுட்பக் கல்விக் கழகமானது மொழி மற்றும் அறிவாற்றல் ஆய்வகத்தை அமைத்துள்ளது.
- மனிதர்கள் மொழியை எவ்வாறு உணர்கிறார்கள், செயலாக்குகிறார்கள் மற்றும் மேம்படுத்தச் செய்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள இந்த ஆய்வகம் சோதனை மற்றும் தொழில்நுட்ப அடிப்படையிலான முறைகளைப் பயன்படுத்துகிறது.
- சோதனை வழி மொழியியல் மூலம் மொழியை முறையாகப் பகுப்பாய்வு செய்யும் இந்தியாவின் முதல் மையம் இதுவாகும்.
- பன்மொழி சூழல்களில் மொழியியல் செயலாக்கத்தை ஆராய இந்த ஆய்வகம் கண்களின் செயல்பாடுகளின் நேரடிக் கண்காணிப்பு மற்றும் எதிர்வினை ஆற்றுவதற்கான நேர ஆய்வுகள் போன்ற நுட்பங்களைப் பயன்படுத்துகிறது.
- மொழியியல் ரீதியாக விழிப்புணர்வு மற்றும் மனிதனை மையமாகக் கொண்ட செயற்கை நுண்ணறிவு அமைப்புகளை உருவாக்க இந்த ஆய்வகம் பொறுப்பான செயற்கை நுண்ணறிவிற்கான மையத்துடன் இணைந்து செயல்படுகிறது.

- இந்திய குழந்தைகளில் இலக்கணம் நிரம்பிய பேச்சு/குரல், கோபுலா கட்டுமானங்கள் மற்றும் டிஸ்லெக்ஸியா (வாசிப்புக் குறைபாடுகள்) ஆய்வுகள் போன்ற பகுதிகளை உள்ளடக்கிய ஆராய்ச்சி இந்திய மொழிகளில் கவனம் செலுத்துகிறது.




## கோஹார்ட் கனெக்ட் 2025




- கோஹார்ட் கனெக்ட் 2025 எனப்படும் நீளமான கோஹார்ட் ஆய்வுகள் குறித்த பினோம் தேசிய மாநாட்டை இந்தியா தொடங்கியது.
- இது புவனேஸ்வரில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி சபையின் கனிமங்கள் மற்றும் பொருட்கள் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் (CSIR–IMMT) தொடங்கப் பட்டது.
- இந்த முன்னெடுப்பானது முக்கிய நோய்களின் மரபணு, இயக்க முறை மற்றும் சுற்றுச்சூழல் இயக்கிகளை ஆராயும் இந்தியாவின் மிகப்பெரியச் சான்றுகள் சார்ந்த ஆய்வாக மாறுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நீரிழிவு நோய் போன்ற வளர்சிதை மாற்றக் கோளாறுகள் மற்றும் அவற்றின் தொடர்பு உடைய சிக்கல்களின் அதிகரித்து வரும் ஒரு தேசிய நெருக்கடியை இந்த வெளியீடு எடுத்துக் காட்டுகிறது.
- இந்தியா ஏற்கனவே CSIR மற்றும் உயிரித் தொழில்நுட்பத் துறை மூலம் கிட்டத்தட்ட

10,000 மனித மரபணுக்களை வரிசைப்படுத்தியுள்ளது என்பதோடு ஒரு மில்லியன் மரபணு வரிசைகளை நோக்கிப் பணிகள் முன்னேறி வருகின்றன.

- தடுப்பு மற்றும் துல்லிய-மருத்துவ அணுகுமுறைகளுக்கான இந்தியா சார்ந்தத் தரவுகளை உருவாக்குவதற்கான ஒரு நீண்ட காலக் கூட்டு ஆய்வுகளை இந்தத் திட்டம் ஆதரிக்கும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## பருவநிலை தொடர்பான தவறான தகவலை எதிர்த்துப் போராடுவதற்கான COP30 பிரகடனம்





- பிரேசிலின் பெலெமில் நடைபெற்ற COP30 மாநாட்டில் பருவநிலை மாற்றம் குறித்த தகவல் நெறிமை குறித்த பிரகடனத்தில் பன்னிரண்டு நாடுகள் கையெழுத்திட்டன.
- இந்த ஒப்பந்தம் துல்லியமான பருவநிலை தகவல்களைப் பாதுகாக்கிறது மற்றும் தவறான தகவல், மறுப்பு மற்றும் அறிவியலாளர்கள் மீதான தாக்குதல்களை எதிர்த்துப் போராடுகிறது.
- கையொப்பமிட்ட நாடுகளில் பிரேசில், கனடா, சிலி, டென்மார்க், பின்லாந்து, பிரான்சு, ஜெர்மனி, ஸ்பெயின், சுவீடன், பெல்ஜியம், நெதர்லாந்து மற்றும் உருகுவே ஆகியவை அடங்கும்.
- இந்த முன்னெடுப்பினை யுனெஸ்கோ, ஐ.நா. மற்றும் பிரேசில் அரசு இணைந்து தொடங்கியுள்ளன.

## சாரண்டா காடு - வனவிலங்கு சரணாலயம்


- சாரண்டா காடுகளின் 31,468.25 ஹெக்டேர் பகுதியை வனவிலங்குச் சரணாலயமாக அறிவிக்க உச்ச நீதிமன்றம் ஜார்க்கண்ட் அரசிற்கு உத்தரவிட்டது.
- சால் காட்டு ஆமை, நான்கு கொம்புகள் கொண்ட மறிமான், ஆசிய மரநாய் மற்றும் காட்டு யானைகள் உள்ளிட்ட அருகி வரும் உயிரினங்களுக்கு சாரண்டா வாழ்விடமாக உள்ளது.
- இந்த காடு ஹோ, முண்டா மற்றும் உரான் போன்ற பழங்குடி சமூகங்களை கொண்டு உள்ளது என்பதோடு இந்த அந்தஸ்து மூலம் அவர்களின் உரிமைகள் பாதிக்கப்படாமல் இருக்கும்.
- இந்தியாவின் இரும்புத் தாது இருப்புகளில் 26% இந்தப் பகுதியில் உள்ளது ஆனால் புதிதாக அறிவிக்கப்பட்ட சரணாலயத்தில் எந்தச் சுரங்கமும் இல்லை.

- சரணாலயத்திற்குள் மற்றும் அதன் எல்லையிலிருந்து ஒரு கிலோமீட்டருக்குள் சுரங்க நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ளன.
- ஜார்க்கண்டின் மேற்கு சிங்பூம் மாவட்டத்தில் சரண்டா காடு அமைந்துள்ளது.
- இது ஆசியாவின் மிகப்பெரிய சால் காடு ஆகும்.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## நில இடைவெளி அறிக்கை 2025




- தோராயமாக 1.01 பில்லியன் ஹெக்டர் பரப்பிலான நிலத்தை நில அடிப்படையிலான

கார்பன் அகற்றுதலுக்கு (LBCR) பயன்படுத்த திட்டமிட்டுள்ளது.

❖ LBCR என்பது காடுகள், மண், ஈரநிலங்கள் மற்றும் வேளாண் நிலப்பரப்புகள் போன்ற நிலப்பரப்பு சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பயன்படுத்தி வளிமண்டலத்தில் இருந்து கார்பன் டை ஆக்சைடை உறிஞ்சி சேமிக்கும் உத்திகளைக் குறிக்கிறது.

❖ முக்கிய LBCR முறைகளில் மீள் வனமாக்கம் மற்றும் காடு வளர்ப்பு மற்றும் மண்-கார்பன் பிரித்தெடுத்தல் ஆகியவை அடங்கும்.

❖ கார்பன் பிடிப்பு மற்றும் சேமிப்புடன் கூடிய உயிரி ஆற்றல் (BECCS), புவியியல் கார்பன் பிரித்தெடுத்தல், கரிமக் கரி மற்றும் மேம்படுத்தப்பட்ட வானிலை ஆகியவை பிற முறைகளில் அடங்கும்.

❖ LBCR உத்தியினை பெரிய அளவில் சார்ந்திருப்பது உணவு உற்பத்தியை இடமாற்றம் செய்யலாம் என்பதோடு, பல்லுயிரியலுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தலாம் மற்றும் வாழ்வாதாரங்களைச் சீர்குலைக்கலாம், குறிப்பிடத்தக்க சமூக மற்றும் சுற்றுச்சூழல் வர்த்தகப் பரிமாற்றங்களை உருவாக்கலாம்.

❖ காடழிப்பை நிறுத்துவதற்கான உறுதிமொழிகள் இதில் இருந்தபோதிலும், 2030 ஆம் ஆண்டிற்குள் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 20 மில்லியன் ஹெக்டேர் காடுகள் இழக்கப் படலாம் அல்லது சீரழிக்கப்படலாம் என்பதை வன இடைவெளி காட்டுகிறது.

# மாநிலச் செய்திகள்

## EoDB தரவரிசை 2024




❖ 2024 ஆம் ஆண்டு வணிகச் சீர்திருத்தச் செயல் திட்டத்தின் கீழ் வேகமாக முன்னேறும் பிரிவில் கேரளா முதலிடத்தில் உள்ளது.

❖ முந்தைய ஆண்டில் 91% உடன் ஒப்பிடும் போது, 2024 ஆம் ஆண்டில் கேரளா மாநிலம் 99.3% சீர்திருத்தங்களை அடைந்தது.

- ஆந்திரப் பிரதேசம் மாநிலமும் வேகமாக முன்னேறும் பிரிவில் பட்டியலிடப்பட்டது அதே நேரத்தில் தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா ஆகியன பெரும் இலட்சியமிக்க மாநிலங்கள் /ஆர்வலர்கள் பிரிவில் இடம் பெற்றன.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சாலுமரத திம்மக்கா

- கர்நாடகாவின் மரங்களின் தாய் என்று அழைக்கப்படும் சாலுமரத திம்மக்கா அவரது 114 வது வயதில் காலமானார்.
- "சாலுமரத" என்ற பட்டம் கன்னட மொழியில் "மரங்களின் வரிசை" என்று பொருள் படும்.
- அவர் கூடூரிலிருந்து ஹுலிகல் வரையிலான மாநில நெடுஞ்சாலை - 94 வழியில் 385 ஆல மரங்களை நட்டார்.
- முறையான கல்வி இல்லாத அவர் முன்பு ஒரு குவாரி தொழிலாளியாக பணி புரிந்தவர் ஆவார்.
- 2019 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருதைப் பெற்ற அவர் 2016 ஆம் ஆண்டு BBCயின் 100 முன்னணிப் பெண்கள் பட்டியலில் இடம் பெற்றார்.





# முக்கிய தினங்கள்

## குழந்தைகள் தினம் 2025 - நவம்பர் 14

- பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளை நினைவு கூரும் வகையில் இது

ஒவ்வோர் ஆண்டும் அனுசரிக்கப் படுகிறது.

- ஜவஹர்லால் நேரு சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ஆவார்.
- அவர் அறிவியல் மனப்பான்மையை ஊக்குவித்தார் மற்றும் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகங்கள் (IIT), அகில இந்திய மருத்துவ அறிவியல் கல்வி நிறுவனம் (AIIMS) மற்றும் பல்கலைக் கழக மானியக் குழு (UGC) போன்ற நிறுவனங்களை உருவாக்கச் செய்வதை ஆதரித்தார்.
- 1946 ஆம் ஆண்டில் அவர் குறிக்கோள் தீர்மானத்தை முன்வைத்தார் என்ற நிலையில் இது அரசியலமைப்பின் அடித்தளமாக மாறியது.
- அவர் The Discovery of India, Glimpses of World History மற்றும் சுயசரிதை ஆகியவற்றை எழுதினார்.
- அவர் 1938 ஆம் ஆண்டில் தேசியத் திட்டமிடல் குழுவின் தலைவராக பணியாற்றினார், என்பதோடு இந்தியாவின் ஆரம்ப கால ஐந்தாண்டுத் திட்டங்களையும் அவர் வழி நடத்தினார்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "For Every Child, Every Right" என்பதாகும்.





# இதரச் செய்திகள்

## ஈரானில் வறட்சி நெருக்கடி

- முக்கிய அணைகளில் நீர் மிகக் குறைந்த மட்டத்தில் உள்ளதுடன், ஈரான் சுமார் 60 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மோசமான வறட்சியை எதிர்கொண்டு வருகிறது.
- கடந்த ஆண்டு தெஹ்ரானில் 159 மிமீ மழைப் பொழிவு மட்டுமே பதிவானது என்பதோடு இது நகரத்தில் நீர் விநியோகத்தைப் பாதித்தது.
- தெஹ்ரானுக்கு நீர் வழங்கும் அமீர் கபீர் அணை, நகரத்தின் தினசரி நீர் பயன்பாட்டில் பாதிக்கும் குறைவானதாக ஒரு நாளைக்கு சுமார் 14 மில்லியன் கன லிட்டர் மட்டுமே நீர் இருப்பினைக் கொண்டுள்ளது.
- குறைந்த மழைப்பொழிவு, நிலையற்ற முறையிலான நீர் மேலாண்மை, சட்டவிரோதக்

கிணறுகள் மற்றும் டெஹ்ரானில் ஆண்டிற்கு 300 மிமீ நிலத்தடி நீர்மட்டம் குறைதல் ஆகியவை இதற்கான காரணிகளில் அடங்கும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★